# Tnpsc Model Question Paper 22 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. பின்வருவனவற்றுள் எது/எவை கார்பனின் மாற்றுரு அல்ல?
(அ) வைரம்
(ஆ) கார்பொரண்டம்
(இ) கிராபைட்
(ஈ) புல்லரீன்
(அ) அ மற்றும் இ (ஆ) ஆ மற்றும் ஈ **(இ) ஆ மட்டும்** (ஈ) அ, இ மற்றும் ஈ

2. உணவு வலை என்பது
(அ) உணவுச்சங்கிலியின் ஒரு பகுதி
(ஆ) உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் சிதைப்பன
**(இ) உணவுச் சங்கிலியின் பிணைப்பு**
(ஈ) ஒத்த நுகர்வோரின் தொகுப்பு

3. பந்திப்பூர் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள இடம்
(அ) முதுமலை **(ஆ) மைசூர்** (இ) கேரளா (ஈ) ராஜஸ்தான்

4. பரிணாமவியலில் "பயன் மற்றும் பயனற்ற" கோட்பாட்டினை முன்மொழிந்தவர்
(அ) சார்லஸ் டார்வின் (ஆ) ஆல்பரட் வாலஸ் **(இ) லாமார்க்** (ஈ) ஹாட்டன்

5. கீழ்க்கண்ட எந்தச் சேர்மம் உரமாகப் பயன்படுகின்றன?
**(அ) அம்மோனியம் குளோரைடு** (ஆ) அம்மோனியம் புரோமைடு
(இ) அம்மோனியம் ஃபுளுரைடு (ஈ) அம்மோனியம் ஆக்சைடு

6. ஒரு நீர்மக் கரைசலின் pH, 25$^{\circ}$C வெப்பநிலையில் 8 என்றால், அதன் pOH எதற்கு சமம்?
(அ) 1 (ஆ) 7 (இ) 0 **(ஈ) 6**

7. தேனை அதன் மெழுகிலிருந்து பிரிக்க பயன்படுவது
**(அ) மையவிலக்கி** (ஆ) மையநோக்கி (இ) தளவிளைவாக்கி (ஈ) பகுப்பான்

8. அண்டத்தில் புவிஈர்ப்பு முடுக்கம் இல்லையெனில் கீழ்கண்டவற்றுள் எது சரியானது?
(அ) எடையின்மை என்ற உணர்வை ஏற்படுத்தும்
(ஆ) முற்றிலும் உருக்குலைவை ஏற்படுத்தும்
(இ) இரவு பகல் என்பன நாம் பார்க்கலாம்
**(ஈ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரி**

9. நமது உணவின் முக்கிய பகுதியாகவும் மேலும் நோய் தொற்றினை எதிர்த்து போராட உதவி செய்வதும் --------- ஆகும்
(அ) கார்போஹைட்ரேட் **(ஆ) புரதம்** (இ) கொழுப்பு (ஈ) ஸ்டார்ச்சு

10. SVAMITVA திட்டம் தொடர்பான அறிக்கையை கவனியுங்கள்:
1. கிராமப்புற நிலப்பதிவேடுகளைப் புதுப்பித்தல், கிராமப்புறக் குடும்பங்களுக்கு உரிமைப் பதிவேடு வழங்குதல் மற்றும் சொத்து அட்டைகளை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.
2. SVAMITVA என்பது பஞ்சாயத்து ராஜ் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மத்திய திட்டமாகும்.
3. இத்திட்டம் நாடு முழுவதும் பத்தாண்டுகளுக்குள் ஒரு கட்டமாக செயல்படுத்தப்படும்.
கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்
**(அ) 1 மற்றும் 2 மட்டுமே** (ஆ) 1 மற்றும் 3 மட்டுமே

winmeen.com

(இ) 2 மற்றும் 3 மட்டுமே (ஈ) 3 மட்டுமே

11. பொருளாதார சரிவின் அறிகுறி எது?
1. உயரும் கூலி.
2. உயரும் வேலையின்மை.
3. விரைவான தொழில்வளர்ச்சி.
4. நிலையான அரசியல் சூழல்
(அ) 2, 3, 1, 4 **(ஆ) 1, 3, 4, 2** (இ) 4, 3, 2, 1 (ஈ) 3, 1, 4, 2

12. பின்வரும் திட்டங்களில் திருநங்கைகளின் நலன் மற்றும் ஒட்டுமொத்த மறுவாழ்விற்கான மத்திய அரசின் திட்டம் எது?
**(அ) ஸ்மைல்** (ஆ) நமஸ்தே (இ) அம்பர் (ஈ) வெஸ்ட்

13. "டிஜிட்டல் இந்தியா" எனும் முன்முயற்சி செயல்படுத்தப்பட்ட ஆண்டு
(அ) 2012 (ஆ) 2013 (இ) 2014 **(ஈ) 2015**

14. "பொதுவுடைமை அறிக்கை" எனும் நூலை எழுதியவர்கள் யார்?
(அ) லெனின் (ஆ) ஸ்டாலின்
**(இ) கார்ல் மாக்ஸ் மற்றும் பிரெடிரிக் ஏங்கல்ஸ்** (ஈ) ஆடம் ஸ்மித்

15. கோட்டை அமீர் விருது 2022 ஆண்டில் திரு.ஜே.முகமது ரஃபி பெற்றார். இவர் --------- மாவட்டத்தைச் சார்ந்தவர்.
(அ) மதுரை **(ஆ) கோயம்புத்தூர்** (இ) திருப்பூர் (ஈ) சிவகங்கை

16. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, எந்த யூனியன் பிரதேசத்தில் மக்கள் தொகை அடர்த்தி குறைவாக உள்ளது?
(அ) டாமன் மற்றும் டையூ (ஆ) லட்சத்தீவு
**(இ) அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்** (ஈ) தாதர் மற்றும் நகர் ஹவேலி

17. சர்வதேச அளவில் வெப்ப மண்டல செர்னோசெம் என்று அழைக்கப்படக் கூடிய மண் ---------. இவை இந்தியாவில் மூன்றாவது மிகப்பெரிய மண் குழுவைச் சார்ந்தது.
(அ) பாலைவன மண் (ஆ) வண்டல் மண் (இ) சிவப்பு மண் **(ஈ) கருப்பு மண்**

18. --------- ஆறு இந்தியாவில் உருவானது இல்லை
(அ) பியாஸ் **(ஆ) சட்லஜ்** (இ) செனாப் (ஈ) ரவி

19. எந்தவகை காலநிலை பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளது?
அ. ஆண்டு சராசரி வெப்பநிலை 18$^{O}$C க்கு மேல்.
2. பருவகால மழை (கோடை காலத்தில்)
3. மழைமறைவு பகுதியில் அமைந்துள்ளது.
**(அ) மிதவறண்ட புல்வெளி காலநிலை** (ஆ) அயனமண்டல பாலைவனக் காலநிலை
(இ) மிதவெப்ப ஈரக் காலநிலைகள் (ஈ) வெப்பமண்டல ஈரமான காலநிலை

20. ஓசோன் அடுக்கு முக்கியமாகப் பூமியின் மேற்பரப்பில் இருந்து 10 முதல் 15 கி.மீ.க்கு மேல் குவிந்துள்ளது. அதன் பெயர் என்ன?
(அ) ட்ரோபோஸ்பியர் **(ஆ) ஸ்ரேட்டோஸ்பியர்**
(இ) மீசோஸ்பியர் (ஈ) அயனோஸ்பியர்

21. பின்வருவனவற்றுள் தமிழ்நாட்டின் முக்கிய பழங்குடியினர்?
1. குறும்பர்.
2. பணியர்.

3. தோடர்.
4. பைன்னர்
(அ) அ, ஆ மற்றும் ஈ (ஆ) ஆ, இ மற்றும் ஈ **(இ) அ, ஆ மற்றும் இ** (ஈ) இ மற்றும் ஈ

22. குப்தர் காலத்தில் இருந்த அரசாங்கத்தின் வகையைக் குறிப்பிடவும்
(அ) குழு ஆட்சி **(ஆ) முடியாட்சி** (இ) அராஜக ஆட்சி (ஈ) எதேச்சதிகார ஆட்சி

23. குவாஜா ஜஹான் என்பவர் கீழ்க்கண்ட சுல்தானின் வசீர் ஆக இருந்தவர்
**(அ) முகமது பின் துக்ளக்** (ஆ) பெரோஸ் துக்ளக்
(இ) முதலாம் முகமது (ஈ) இரண்டாம் துக்ளக் ஷா

24. பின்வரும் அரசுகளில், எந்த அரசு "சௌத்" எனப்படும் வரியை விதித்தது?
**(அ) மராட்டியர்** (ஆ) சோழர்கள் (இ) சண்டிளாஸ் (ஈ) மௌரியர்கள்

25. சங்கம வம்சத்தின் கடைசி மன்னர்------------
(அ) முதலாம் தேவராயர் (ஆ) மல்லிகார்ஜீனராயர்
**(இ) இரண்டாம் விருபாக்ஷர்** (ஈ) இரண்டாம் தேவராயர்

26. கோனார்க் சூரியக்கோவில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(அ) நீல பகோடோ (ஆ) தங்க பகோடா **(இ) கருப்பு பகோடா** (ஈ) வெள்ளை பகோடா

27. தௌலதாபாத்திற்கு அருகில் வானியல் ஆய்வுக்கூடம் கட்டியவர் யார்?
(அ) அலாவுதீன் ஹசன் கங்கு (ஆ) முகமது கவாண்
(இ) ஹீமாயூன் ஷா **(ஈ) பெரோஷா பாமினி**

28. ஒவ்வொரு நபரும் தனது நம்பிக்கையைச் சுதந்திரமாகக் கடைப்பிடிக்க உரிமை உண்டு. மத மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவவும் பராமரிக்கவும் ---------- உரிமை தேவைப்படுகிறது.
(அ) சுதந்திர உரிமை (ஆ) சம உரிமை
(இ) கலாச்சார மற்றும் கல்வி உரிமை **(ஈ) மத சுதந்திரத்திற்கான உரிமை**

29. "நிர்வாகச் சட்டம், சட்டத்தின் ஆட்சிக்கு முரணானது" என விவரித்தவர் யார்?
(அ) P.C.ஜெயின் **(ஆ) A.V.டெய்ஸி** (இ) ஐவர் ஜென்னிங்ஸ் (ஈ) C.F.ஸ்ட்ராங்

30. சர்காரியா ஆணையம் எதைக் குறித்துப் பரிந்துரைக்க அமைக்கப்பட்டது?
(அ) ஊழல் ஒழிப்பு **(ஆ) ஒன்றிய-மாநில உறவுகள்**
(இ) உள்ளாட்சி நிர்வாக மேம்பாடு (ஈ) நிர்வாக நிலைகள் குறித்து ஆராய

31. ஒரு மாநிலத்தின் செயலாற்றும் அதிகாரங்கள் ஆளுநரிடம் இருக்கும் எனக்கூறும் அரசமைப்பு விதி எது?
(அ) விதி 153 **(ஆ) விதி 154** (இ) விதி 155 (ஈ) விதி 156

32. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருத்தப்படவில்லை?
(அ) சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் – 1955 (ஆ) வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் – 1972
(இ) வனப் பாதுகாப்புச் சட்டம் – 1980 **(ஈ) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் – 1957**

33. அடிப்படைக் கடமைகளைப் பற்றிய பின்வரும் சொற்றொடர்களில் எவை சரியானவை?
1. 6-14 வயது உள்ள குழந்தைகளுக்குக் இலவச மற்றும் கட்டாயக் கல்வி கொடுத்தல்.
2. பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்.
3. அறிவியல் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
(அ) 1 மட்டும் (ஆ) 2 மற்றும் 1 ஆகியன மட்டும்
(இ) 2 மற்றும் 3 ஆகியன மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3 ஆகியவை**

winmeen.com

34. 1. அடிப்படை உரிமைகள் பகுதி III–இல் சட்டப்பிரிவு 12 முதல் 35 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.
2. இந்தியாவின் மகா சாசனம் என்று விவரிக்கப்படுகிறது பகுதி III.
மேற்கண்ட கூற்றில் எது/எவை சரியானது/சரியானவை.?
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் **(இ) 1 மற்றும் 2** (ஈ) இவற்றில் எவையும் இல்லை

35. தகவல் அறியும் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டதின் அடிப்படை நோக்கமாவது ------
(அ) சமூக நீதி
(ஆ) பொருளாதார வளர்ச்சி
(இ) செயல்திறனும், செயல்வலிமையுமான ஆட்சி முறை
**(ஈ) பொறுப்பான, ஒளிவு மறைவற்ற ஆட்சி முறை**

36. டெல்லி சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையுடன் கூடிய தேசியத் தலைநகரப் பகுதியாக உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தம்
(அ) 65வது அரசமைப்பு சட்டத்திருத்தம் (ஆ) 67வது அரசமைப்பு சட்டத்திருத்தம்
**(இ) 69வது அரசமைப்பு சட்டத்திருத்தம்** (ஈ) 71வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

37. மனிதவள மேம்பாட்டு அறிக்கையின்படி (2020) இந்தியா ---------- தரப்பட்டியல் இடத்தில் உள்ளது.
(அ) 159 **(ஆ) 131** (இ) 100 (ஈ) 50

38. "வறுமைக் கடலில் தீவுகளாக நாங்கள் மகிழ்ச்சியுடன் வாழமுடியாது" என்ற சொற்களை முன்மொழிந்தவர் ------
(அ) திரு.நீலகாந்த் ராத் **(ஆ) எம்.எஸ்.சுவாமிநாதன்**
(இ) டாக்டர்.வி.எம்.தண்டேகர் (ஈ) திரு.பி.டி.ஓஜா

39. கீழ்க்காணும் நிகழ்வுகளை காலவாரியாக வரிசைப்படுத்துக.
1. வட்டார கிராம வங்கிகள்.
2. விதை மசோதா.
3. ஒருங்கிணைந்த பயிர் காப்பீட்டுத் திட்டம்.
4. கிசான் கடன் அட்டை
(அ) 3, 1, 2, 4 (ஆ) 2, 3, 4, 1 **(இ) 1.3, 4, 2** (ஈ) 4, 2, 3, 1

40. எந்த ஒரு வரி நேரடி வரிக்கு தொடர்பில்லாதது?
(அ) நன்கொடை வரி (ஆ) சொத்து வரி (இ) வருமான வரி **(ஈ) சுங்க வரி**

41. கீழ்க்கண்ட பணிகளில் ரிசர்வ் வங்கி மேற்கொள்ளும் பணிகள் எது/எவை?
1. பணத்தை வெளியிடுதல்.
2. வங்கி கடன்களைக் கட்டுப்படுத்துதல்.
3. அரசில் வங்கி.
4. மாற்று வீதத்தைக் கட்டுப்படுத்துதல்
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 1, 2 மற்றும் 4 மட்டும் **(ஈ) 1, 2, 3 மற்றும் 4**

42. அட்டல் இன்னோவேஷன் மிஷன் ----------ஆல் மேம்படுத்தப்பட்டது.
(அ) நாஸ்காம் **(ஆ) நிதி ஆயோக்**
(இ) பாரத் இண்டர்ஃபேஸ் ஃபார் மணி செயலி (ஈ) பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனா

43. கீழ்க்கண்ட கூற்றுகள் சரியா தவறா என்பதைக் குறிப்பிடவும்.
1. கலப்புப் பொருளாதாரத்தில், பொது மற்றும் தனியார் துறை இரண்டும் இணைந்து இருத்தல்.
2. இந்தியாவில் கலப்புப் பொருளாதார முறை பின்பற்றப்படுகிறது.
**(அ) 1 மற்றும் 2 இரண்டும் சரி** (ஆ) 1 மற்றும் 2 இரண்டும் தவறானவை
(இ) 1 சரி; ஆனால் 2 தவறானது (ஈ) 1 தவறானது; ஆனால் 2 சரி

44. "-------------- அவர்களின் இரத்தத் தியாகம் மூலம், இந்த மாவீரர்கள் சுதந்திர இந்தியாவின் வருங்கால வீரர்கள் நிலைநிறுத்த வேண்டிய பாரம்பரியங்களை நிறுவியுள்ளனர்"
18 மார்ச் 1944 அன்று இராணுவ வீரர்களுக்கு இந்த அறிக்கையை வழங்கியவர் யார்?
**(அ) சுபாஷ் சந்திர போஸ்** (ஆ) பட்டாபி சித்தராமையா
(இ) கேப்டன் லட்சுமி சேகல் (ஈ) ராஷ் பிஹாரி போஸ்

45. "சாரே ஜஹாங்சே அச்சா" என்ற புகழ் பெற்ற தேசப்பற்று பாடலை தொகுத்தவர்
**(அ) முகமது இக்பால்** (ஆ) நேரு (இ) தாகூர் (ஈ) சையது அலி

46. எந்த இயக்கத்தின் மூலமாக "செய் அல்லது செத்துமடி" என்னும் பிரச்சாரம் அறியப்பட்டது?
(அ) கிலாபத் இயக்கம் (ஆ) ஒத்துழையாமை இயக்கம்
(இ) சட்ட மறுப்பு இயக்கம் **(ஈ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

47. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் கதாநாயகி எனக் கருதப்படுபவர் யார்?
**(அ) அருணா ஆசப் அலி** (ஆ) மேடம் காமா (இ) அன்னிபெசன்ட் (ஈ) அம்பிகா சரண்

48. இராஜாஜி சட்ட மறுப்புப் போராட்டத்தைத் தொடங்கிய நாள் -------
(அ) மார்ச் 12, 1930 **(ஆ) ஏப்ரல் 13, 1930** (இ) ஏப்ரல் 29, 1930 (ஈ) ஏப்ரல் 30, 1930

49. சர்தார் பகத்சிங் தூக்கிலிடப்பட்ட இடம் -------
(அ) டெல்லி **(ஆ) லாகூர்** (இ) கல்கத்தா (ஈ) சிட்டகாங்

50. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:
கி.பி.1858-ல் கானிங் பிரபு எந்த இடத்தில் மகாராணியார் பிரகடனத்தை வெளிட்டார்?
**(அ) அலகாபாத்** (ஆ) டெல்லி (இ) வங்காளம் (ஈ) கான்பூர்

51. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வை முதன்முதலில் மேற்கொண்டவர்
(அ) ஜான் மார்ஷல் **(ஆ) ஆன்ட்ரூ ஜாகோர்** (இ) புரூஸ் பூட் (ஈ) கன்னிங் ஹாம்

52."சங்கம்" என்ற சொல் எதைக் குறிக்கிறது?
(அ) பெரியர்களின் அவை (ஆ) கலைஞர்களின் அவை
**(இ) தமிழ்க்கவிஞர்கள் அவை** (ஈ) தமிழ் அரசர்கள் அவை

53. விஜயநகரப் பேரரசுக்கு மிகப்பெரிய தோல்வியை கொடுத்ததும், தலைநகர் விஜயநகரத்தில் இருந்து ரேணுகொண்டாவிற்கு மாற்று வழிவகுத்ததுமான போர் ------
**(அ) தலைக்கோட்டை போர்** (ஆ) தோப்பூர் போர்
(இ) திருப்புறம்பியம் போர் (ஈ) முதல் கர்நாடகப்போர்

54. யாருடைய தலைமையின் கீழ் நவம்பர் 2-ம் தேதி 1927, மணிமேகலை சங்கம் என்கிற தேவதாசி பெண்களின் சங்க கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது?
**(அ) சௌத்திரி.வி.கோனாம்பாள்** (ஆ) டாக்டர் முத்துலெட்சுமி
(இ) திருமதி அன்னம்மா ராஜா (ஈ) திருமதி.அன்னிபெசன்ட்

55. கீழே கொடுக்கப்பட்டவர்களில் யார் 1968ம் ஆண்டு சுயமரியாதை திருமண பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியவர்?
**(அ) பேரறிஞர் அண்ணா** (ஆ) இராஜாஜி (இ) பக்தவச்சலம் (ஈ) காமராஜர்

56. நீதி கட்சியில் சி.என்.அண்ணாதுரை ----------- சேர்ந்தார்
(அ) கி.பி.1925 **(ஆ) கி.பி.1935** (இ) கி.பி.1940 (ஈ) கி.பி.1947

57. ஈ.வெ.ரா.பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஏன் தொடங்கினார்?

**(அ) சாதி ஒழிப்பிற்காக** (ஆ) சமயங்களை ஒழிப்பதற்காக
(இ) பிராமணியத்தினை ஒழிப்பதற்காக (ஈ) காங்கிரசினை ஒழிப்பதற்காக

58. "கொக்கொக்க கூம்பும் பருவத்து"---- என்ற குறளில் எதைப் போன்று காரிபத்தை முடிக்க வேண்டுமென்று வள்ளுவர் கூறுகிறார்?
**(அ) கொக்கு** (ஆ) ஆமை (இ) முயல் (ஈ) எறும்பு

59. மன்னனின் குற்றமான இயல்பு எதுவென்று திருக்குறள் கூறுகிறது?
(அ) வேண்டாத மகிழ்ச்சி (ஆ) பொய்யான மானம் (இ) கஞ்சத்தன்மை **(ஈ) இம்மூன்றும்**

60. கீழ்க்காணும் பொருளை உடைய திருக்குறளை தேர்க:
"உண்மையான துறவிகள் வேடம் போட வேண்டிய தேவையில்லை. உலகம் பழிக்கின்ற தவறான செயல்களை ஒழித்துவிடுவது ஒன்றே துறவிகளுக்கு வேண்டுவது"
(அ) வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்
(ஆ) புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.
(இ) மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்துஒழுகு மாந்தர் பலர்
**(ஈ) மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்**

61. ஞாலத்தின் மாணப் பெரிது எது?
**(அ) தக்க காலத்தில் செய்யப்படும் உதவி** (ஆ) பயனை எதிர்பார்த்துச் செய்யும் உதவி
(இ) பொறுமையாகச் செய்யப்படும் உதவி (ஈ) பயனோடு கூடிய உதவி

62. "யாருக்கும் வெட்கமில்லை" என்னும் நாடகத்தினை எழுதியவர் யார்?
(அ) மௌலி (ஆ) கிரேசி மோகன் **(இ) சோ** (ஈ) எஸ்.வி.சேகர்

63. இராம அவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஆழ்வார் யார்?
**(அ) குலசேகரர்** (ஆ) பெரியாழ்வார் (இ) ஆண்டாள் (ஈ) திருமழிசையாழ்வார்

64. "முல்லைப்பாட்டு" என்னும் நூலின் ஆசிரியர் யார்?
(அ) நல்லந்துவனார் (ஆ) நத்தத்தனார் (இ) நக்கீரர் **(ஈ) நப்பூதனார்**

65. சரியானவற்றை பொருத்துக:
அ. நாழிகை வட்டில் 1. சிறிய அளவை
ஆ. நாழி 2. பெரிய அறுங்கோண அளவை
இ. அம்பாரம் 3. குதிரை கிராம் அளவு
ஈ. பதக்கு 4. நேர அளவு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| **இ.** | **4** | **1** | **2** | **3** |
| ஈ. | 1 | 2 | 4 | 3 |

66. தமிழ்நாட்டில் தேசிய விவசாய மின்னணு அங்காடிக்கான இணைய முகப்பு ---------இல தொடங்கப்பட்டது
(அ) ஏப்ரல், 2015 **(ஆ) ஏப்ரல், 2016** (இ) ஏப்ரல், 2017 (ஈ) ஜீன், 2016

67. இந்தியாவில் ------- மாநிலம் மகளிர் உயிர்த் தொழில் நுட்பப் பூங்காவை தொடங்கியது
**(அ) தமிழ்நாடு** (ஆ) கேரளா (இ) குஜராத் (ஈ) பஞ்சாப்

68. தமிழக அரசின் கொள்கைக் குறிப்பு 2021-22ன் படி தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சியை அதனோடு தொடர்புடைய இந்திய அளவிலான தரவரிசையோடு பொருத்துக:

| | |
|---|---|
| அ. துணி | 1. முதலிடம் |
| ஆ. உணவுப் பதப்படுத்தல் | 2. இரண்டாமிடம் |
| இ. ரப்பர் மற்றும் நெகிழ் | 3. மூன்றாமிடம் |
| ஈ. வுாகன உற்பத்தி மற்றும் வாகன உதிரி பாகங்கள் | 4. நான்காமிடம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 2 | 4 |
| ஆ. | 3 | 2 | 4 | 1 |
| **இ.** | **2** | **4** | **3** | **1** |
| ஈ. | 4 | 1 | 3 | 2 |

69. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில், மாற்றுத் திறனாளிகளைப் பணியமர்த்திய முதல் மாநிலம் எது?

**(அ) தமிழ்நாடு** (ஆ) கேரளா (இ) கர்நாடகா (ஈ) குஜராத்

70. TNHSRP திட்டம் குறிப்பாகக் கவனம் செலுத்துவன:
1. தமிழகத்தில் பொருள் மற்றும் பிறந்த குழந்தை இறப்பு விகிதங்களைக் குறைத்தல்.
2. பழங்குடியினரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.
3. பின்தங்கிய குழுக்கள் மருத்துவமனைகளைப் பயன்படுத்துவதை வரவேற்றல்.
4. விபத்து பராமரிப்பு

(அ) 1 உண்மை ஆனால் 4 பொய்
(ஆ) 1 மற்றும் 3 இரண்டும் உண்மை. ஆனால் 4 என்பது சரியான பதில்அல்ல
(இ) 4 உண்மை ஆனால் 3 பொய்
**(ஈ) 1 மற்றும் 4 இரண்டும் உண்மை. 2 பொய்**

71. தமிழ்நாடு காவலர் அருங்காட்சியகம் எங்கு அமைந்துள்ளது?

(அ) சைதாப்பேட்டை (ஆ) திருவல்லிக்கேணி **(இ) எழும்பூர்** (ஈ) தாம்பரம்

72. தமிழ்நாடு சமூகநல வாரியம் உருவாக்கப்பட்ட ஆண்டு ---

(அ) 1953 **(ஆ) 1954** (இ) 1955 (ஈ) 1965

73. தமிழகத்தில் பொறியியல், மருத்துவம் மற்றும் இதர படிப்புகளில் சேர ----------% இட ஒதுக்கீடு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

(அ) 6.5% (ஆ) 7.3% **(இ) 7.5%** (ஈ) 7.7%

74. பொருத்துக:

| கட்சி/இயக்கம் | தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| அ. மெட்ராஸ் திராவிட இயக்கம் | 1. 1916 |
| ஆ. சுயமரியாதை இயக்கம் | 2. 1925 |
| இ. தென்னிந்திய தாராளவாதக் கூட்டமைப்பு | 3. 1944 |
| ஈ. திராவிடர் கழகம் | 4. 1912 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **2** | **1** | **3** |
| ஆ. | 1 | 2 | 4 | 3 |
| இ. | 4 | 1 | 2 | 3 |
| ஈ. | 2 | 4 | 1 | 3 |

winmeen.com

75. வ.உ.சிதம்பரனாரால் தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது. அவர்————————————, ————————————— என்ற பெயர்களையுடைய இரண்டு கப்பல்களை வாங்கினார். அவை —————————————க்கும் ———————————க்கும் இடையே செலுத்தப்பட்டது.
**(அ) காலியா, லாவோ ; தூத்துக்குடி, கொழும்பு**
(ஆ) டாண்டயா, காலியா ; தூத்துக்குடி, பர்மா
(இ) டான்யா, லாவோ பூம்புகார், பர்மா
(ஈ) காலியா, டான்யா ; தூத்துக்குடி, இந்தோனேசியா

76. ஆண்டிற்கு 10% வீதம் வட்டி தரும் ஒரு வங்கியில் லோகேஷ் ரூ.10, 000 வைப்பு நிதியாக செலுத்தினார். அத்தொகையை 2 ஆண்டுகள் 3 மாதங்களுக்குப் பிறகு அவர் திரும்பப் பெறுகிறார். அவர் பெற்ற வட்டியைக் காண்க:
(அ) ரூ.1, 750 (ஆ) ரூ. 2, 000 **(இ) ரூ.2, 250** (ஈ) ரூ.2, 500

77. ஓர் அசலானது 4 ஆண்டுகளில் இரண்டு மடங்காகிறது எனில் அதன் தனி வட்டி வீதத்தைக் காண்க:
(அ) 20% **(ஆ) 25%** (இ) 30% (ஈ) 50%

78. எத்தனை ஆண்டுகளில் 8% வட்டி வீதத்தில் ரூ.5, 000 மானது ரூ.5, 800 ஆக மாறும்
**(அ) 2 ஆண்டுகள்** (ஆ) 2 1/2 ஆண்டுகள் (இ) 3 ஆண்டுகள் (ஈ) 1 ஆண்டுகள்

79. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. இரண்டு முக மதிப்புகளும் சமமாக இருக்க அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 4 ஆக இருக்க நிகழ்தகவைக் காண்:
(அ) 1/9 (ஆ) 4/9 (இ) 5/9 **(ஈ) 2/9**

80. ஒருவருக்கு இரண்டு குழந்தைகள் மற்றும் ஏதாவது ஒரு குழந்தை பெண் குழந்தை, இரண்டு குழந்தைகளும் பெண் குழந்தைகளாக இருக்க நிகழ்தகவு என்ன?
**(அ) 1/3** (ஆ) 1/2 (இ) 1/4 (ஈ) 3/3

81. ஆண்டுக்கு எந்த விகிதத்தில், கூட்டு வட்டி 3 ஆண்டுகளில் ரூ.10, 000 தொகை ரூ. 13, 310 ஆக இருக்கும்?
(அ) 9% (ஆ) 7% (இ) 8 1/2% **(ஈ) 10%**

82. ஒரு ஆய்வகத்தில் ஒரு குறிப்பிட்ட சோதனையில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை மணிக்கு 2.5% வீதம் அதிகரித்து வருகிறது. ஆரம்பத்தில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை 5, 05, 600 ஆக இருந்தால் 2 மணி நேர முடிவில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?
**(அ) 531196** (ஆ) 539611 (இ) 511396 (ஈ) 539116

83. ஒரு கன செவ்வகத்தின் நீள, அகல உயரங்கள் முறையே 10% அதிகரிக்கும் போது அதன் கன அளவு அதிகரிக்கும் சதவீதம் என்ன?
(அ) 30% (ஆ) 33% **(இ) 33.1%** (ஈ) 33.3.%

84. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில் அதன் விட்டம் காண்க:
**(அ) 7 மீ** (ஆ) 10.5 மீ (இ) 14 மீ (ஈ) 21 மீ

85. ஒரு உருளை வடிவ தண்ணீர் தொட்டியின் கன அளவு 1.078 X $10^6$ லிட்டர் ஆகும். தொட்டியின் விட்டம் 7 மீ எனில் அதன் உயரம் காண்:
**(அ) 28 மீ** (ஆ) 7 மீ (இ) 78 மீ (ஈ) 18 மீ

86. 36, 156 என்ற இரு எண்களின் மி.பொ.வ 12 எனில் அவற்றின் மீ.பொ.ம
**(அ) 468** (ஆ) 452 (இ) 152 (ஈ) 156

87. $t_n$ என்பது ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் n–வது உறுப்பு எனில், $t_{2n}–t_n$ யின் மதிப்பு ——————
**(அ) nd** (ஆ) (n+1) d (இ) (n–1) d (ஈ) nd +1

88. 3, 7, 13, 21, 31 என்ற தொடரில் அடுத்த உறுப்பு

(அ) 39 (ஆ) 41 **(இ) 43** (ஈ) 45

89. மதிப்பு காண்க: $(1^3 + 2^3 + 3^3 \ldots. + 15^3) - (1+2+3+\ldots+15)$

(அ) 14400 (ஆ) 14200 **(இ) 14280** (ஈ) 14520

90. $(x^3-27)$, $(x-3)^2$, $(x^2-9)$ இவற்றின் மீ.பொ.வ காண்க:

**(அ) $(x-3)$** (ஆ) $(x+3)$ (இ) $(x-3)^2$ (ஈ) $(x-9)$

91. இரண்டு ஈரிலக்க எண்களின் பெருக்கற்பலன் 300 மற்றும் அவற்றின் மீ.பெ.கா. 5 எனில் அவ்வெண்கள் யாவை?

**(அ) (15, 20)** (ஆ) (10, 30) (இ) (50, 60) (ஈ) (25, 12)

92. கீழ்கண்டவற்றை கவனித்து விடையளிக்கவும்:

[4–1/32x2+10] / [7/3–8x4–7] =

– என்பது + எனவும், + என்பது – எனவும், / என்பது x எனவும், x என்பது / எனவும் கொண்டால் வரும் மதிப்பு காணவும்.

(அ) 210 (ஆ) 260 **(இ) 300** (ஈ) 840

93. AT = 20, BAT = 40 எனில் CAT என்பது எதற்கு சமம்?

(அ) 30 (ஆ) 50 **(இ) 60** (ஈ) 70

94. X, Y மற்றும் Z ஆகியோர் ஒரு வேலையை முறையே 4, 6 மற்றும் 10 நாள்களில் முடிப்பர். X, Y மற்றும் Z ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலையை முடித்தால், அதற்காக அவர்களுக்கு ரூ.3, 100/– வழக்கப்படும். அவர்கள் தனித்தனியே பெறும் பங்குகளைக் காண்க:

**(அ) 1500 : 1000 : 600** (ஆ) 600 : 1000 : 1500

(இ) 700 : 1100 : 1300 (ஈ) 1300 : 1100 : 700

95. மாதவியும் அன்புவும் இரண்டு மேசைகளை முறையே ரூ.750 மற்றும் ரூ.900க்கு வாங்கினார்கள், அன்புவும் மாதவியும் வாங்கிய மேசைகளின் விலைகளின் விகிதத்தை எளிய வடிவில் கூறு:

(அ) 3 : 4 (ஆ) 4 : 3 (இ) 5 : 6 **(ஈ) 6 : 5**

96. ஒரு பையில் பச்சை : மஞ்சள் : கருப்பு நிற பந்துகள் 4 : 3 : 5 என்ற விகிதத்தில் உள்ளன. அதில் கருப்பு பந்துகளின் எண்ணிக்கை 40 எனில் பையில் உள்ள மொத்த பந்துகளின் எண்ணிக்கை?

(அ) 12 (ஆ) 56 (இ) 64 **(ஈ) 96**

97. 60 வேலையாட்கள் ஒரு பருத்தி நூல் உருண்டையை நூற்க 7 நாட்கள் தேவைப்படுகிறது. 42 ஆட்கள் அதே வேலையை முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

(அ) 11 (ஆ) 15 (இ) 12 **(ஈ) 10**

98. 4 தட்டச்சர்கள் ஒரு வேலையை முடிக்க 12 நாட்கள் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் 2 தட்டச்சர்கள் கூடுதலாகச் சேர்ந்தால் அதே வேலையை –––––––– நாள்களில் செய்து முடிப்பர்.

(அ) 7 **(ஆ) 8** (இ) 9 (ஈ) 10

99. ஓர் எண்ணை 20% குறைத்தால் 80 கிடைக்கிறது எனில், அந்த எண்ணைக் காண்க:

(அ) 200 **(ஆ) 100** (இ) 300 (ஈ) 400

100. சுருக்குக:

$14p^5q^3/2p^2q - 12p^3q^4/3q^2$

(அ) $11p^3q^2$ (ஆ) $3\ p^6q^4$ **(இ) $3\ p^3q^2$** (ஈ) $11\ p^6q^4$